## கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## 30.09.2025 தேதி நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் IUDP கடை எண் 15 (வரி விதிப்பு எண் 057/575 கொண்ட கடைக்கு 31.03.2016 உடன் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்து 01.04.2016 முதல் வாடகை மறுமதிப்பீடு செய்து வாடகை உயர்வு செய்யப்பட்டதை எதிர்த்து மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றம் கோபிசெட்டிபாளையம் அ.வ.எண் 61/2017 ல் வழக்கு தொடர்ந்துள்ளார், மேற்படி வழக்கு அரசாணை (நிலை) எண் 81 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நநி 5(2) நாள் 13.06.2024 ன் படி நகராட்சிக்கு சாதகமாக தள்ளுபடி செய்யப்பட்டது, மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை தொடர்ந்து குத்தகைதாரர் திரு, ஜெ. சுப்பிரமணியம் என்பவர் முகவரிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது, ஆனால் மேற்படி குத்தகைதாரர் அம்முகவரியில் இல்லை என அறிவிப்பு திரும்ப வரப்பெற்றது.

வருவாய் ஆய்வாளர் தனது 26.08.2025 ம் தேதிய குறிப்பில் மேற்படி கடையின் குத்தகைதாரர் திரு, ஜெ, சுப்பிரமணியம் தொடர்பாகஅருகில் உள்ள கடைகளின் குத்தகைதாரர்களிடம் விசாரித்த வகையில் மேற்படி நபர் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னரே கடையினை வேறு ஒரு நபரிடம் ஒப்படைப்பு செய்துவிட்டார் எனவும் அந்த நபர் கேப்டன் பேக்கரி என்ற பெயரில் கடை நடத்தி வந்த நிலையில் 2019-2020 கோவிட் காலத்தில் இறந்துவிட்டார் எனவும் அன்றிலிருந்து கடை பயன்படுத்தப்படாமல் உள்ளது என தெரிவித்தனர், மேலும் 2019-2020 ஆகிய காலங்களில் கடை பயன்படுத்தப்படாமல் உள்ளதை முன்னால் அலுவலர்களால் உறுதி செய்து ஏல நடவடிக்கை மேற்கொள்ளாமல் வழக்கு கேட்பில் நிலுவை கேட்பு எழுப்பப்பட்டு வந்துள்ளது,

இந்நிலையில் மேற்படி கடைக்கு 2019-2020 ஆகஸ்ட் மாதம் முதல் 2024-2025 ஆகஸ்ட் மாதம் முடிய நிலுவை வாடகைத் தொகை ரூ 6,04,720./- வசூலிக்க முடியாத நிலையில் உள்ளது, எனவே IUDP புதிய பேருந்து நிலைய கடை எண் 15ன் குத்தகை உரிமத்தினை ரத்து செய்து 01.09.2025 முதல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

மேலும் இந்நகராட்சி சுகாதார மேற்பார்வையாளர் மற்றும் சுகாதார ஆய்வாளர் மேற்படி கடையினை 2020ற்கு முன்னரே நகராட்சி சுகாதார பிரிவினால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது என தெரிவித்துள்ளனர், எனவே மேற்படி கடையின் நிலுவைத் தொகையினை வசூல் செய்ய எவ்வித முகாந்திரமும் இல்லாத நிலையில் இருப்பதால் மேற்படி நிலுவை வாடகை தொகையினை தள்ளுபடி செய்ய வேண்டி நகர்மன்றத்திற்கு பொருள் வைக்கலாம் என தெரிவித்துள்ளார், எனவே உதவி வருவாய் அலுவலர் (பொ) அவர்களின் குறிப்பின் படி புதிய பேருந்து நிலைய கடை எண் 15 ன் நிலுவை வாடகை தொகையினை தள்ளுபடி செய்ய நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. இந்நகராட்சிக்கு சொந்தமான MUDF பழைய பேருந்து நிலைய வணிக வளாக கட்டிடத்தில் செயல்பட்டு வரும் நகராட்சி மிதிவண்டி நிலையத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 30.04.2025 உடன் முடிவடைந்த நிலையில் முன்னால் குத்தகைதாரர் திரு, ராஜா என்பவர் புதிய கட்டிடம் கட்டும் பணி செயல்படுத்தப்படும் வரை மேற்படி உரிமத்திற்கு கட்டணம் வசூல் செய்ய அனுமதி வழங்க கோரியதன் படி நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு நகர்மன்றத்தின் அனுமதி பெற்று 01.05.2025 முதல் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்து நகராட்சி கணினி வசூல் மையத்தில் செலுத்த அனுமதி வழங்கப்பட்டது, இந்நிலையில் நகராட்சி பொறியாளர் அவர்களின் 06.08.2025 ஆம் தேதிய குறிப்பில் பழைய பேருந்து நிலைய வணிக வளாக கட்டிம் மிகவும் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால் அக்கட்டிடத்தினை இடித்து புதிய வணிக வளாக கட்டிடம் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது எனவே பழைய பேருந்து நிலைய வணிக வளாக கட்டிடத்தினை உடனே காலி செய்து ஒப்படைக்கும் பட்சத்தில் விரைவில் புதிய வணிக

வளாக கட்டிடம் கட்டி உபயோகத்திற்கு கொண்டுவரப்படும் என தெரிவித்துள்ளார், மேலும் உதவி வருவாய் அலுவலர் (பொ) அவர்களின் 01.09.2025 ம் தேதிய குறிப்பில் மேற்படி மிதிவண்டி நிலையத்தில் கட்டணம் வசூல் செய்யும் பணி 31.08.2025 ஆம் தேதியுடன் முடிக்கப்பட்டு 01.09.2025 முதல் மேற்படி உரிமத்தினை ரத்து செய்யலாம் என தெரிவித்துள்ளார், எனவே உதவி வருவாய் அலுவலர் (பொ) அவர்களின் குறிப்பினை ஏற்று MUDF பழைய பேருந்து நிலைய வணிக வளாக கட்டிடம் இடித்து புதிய வணிக வளாக கட்டிடம் கட்டும் பொருட்டு நகராட்சி மிதிவண்டி நிலையத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 01,09,2025 முதல் இரத்து செய்யப்படுகிறது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது, (ந.க.எண்.2560/2023/அ3)

**அலுவலக குறிப்பு:** மன்றத்தின் பதிவு செய்யலாம்

3. .கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 26.08.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் -2 ஜெயராம் எக்ஸ்டன்சன் பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் சிறுவிசை மின் மோட்டார் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2,00,000 | D.N CONSTRUCTION ஒப்பந்ததாரர் | -0.21% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.எஸ்.லோக நாதன் ஒப்பந்ததாரர் | 2.42%சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள D.N CONSTRUCTION ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. மேற்படி பணி திட்டப்பணி என்பதால் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்

4. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 04.09.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான மொடச்சூர் நகராட்சி | 4,50,000 | திரு.லோகு கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரர் | -0.02% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேல்நிலைப்பள்ளியில் உள்ள மாணவர்களின் கழிப்பறை அறைக்கு மேற்கூரை அமைப்பதற்கும் சில மாரமரத்து பணிகள் மேற்கொள்ளும் பணி | | | குறைவு |
| | | | திரு.எம்.அப்புசாமி ஒப்பந்ததாரர் | 1.37% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.லோகு கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 04.09.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு வார்டு எண் 19இல் குப்பாண்டர் வீதியில் உள்ள சிறுபாலங்களை சீரமைக்கும் பணி | 3,00,000 | திரு.S.லோகநாதன் ஒப்பந்ததாரர் | –0.08% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | D.N CONSTRUCTION ஒப்பந்ததாரர் | 5.49% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு. S.லோகநாதன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

6. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளுக்கு தேவையான விழிப்புணர்வு பணிகளுக்கு ஆகும் செலவினங்களுக்கு நகர்மன்ற தீர்மான எண். 1179 நாள். 15.05.2025 இல் அனுமதி அளித்துள்ளதன் பேரில் M/s. Stroke Digital, 5 முத்துஷா வீதி, கோபிசெட்டிபாளையம் அவர்களிடம் விழிப்புணர்வு விளம்பர பலகைகள் தயார் செய்த வகையில் தொகை ரூ. 10,310/– செலவினம் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண். 648/ 2025/எச்1)**

**அலுவலக குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.

7. இந்நகராட்சி பகுதிகளில் கொசுக்களினால் பரவும் டெங்கு உள்ளிட்ட நோய்களை கட்டுப்படுத்த கொசுப்புழுக்களை அழிக்கும் பணிக்கு Pyrethrum 2 % Extract மருந்துகளை கொள்முதல் செய்யும் பணிக்கு ஆகும் செலவினத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 1300, நாள்.31.07.2025 இல் மன்ற ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில் மருந்துகளை

விநியோகம் செய்ய 04.09.2025 தேதியன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.968/2024/எச்1)**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மருந்துகளை விநியோகம் செய்ய வழங்கிய விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | M/s. Murugan & Co,No. 65E-1, Pallipalayam Road,Kumarapalayam, Namakkal - 638 183. | ரூ. 1110/- |
| 2. | M/s. Adithya Agencies.No. 9/182/A 25,K.M.R. Nagar,Erode – 638 316. | ரூ.996/- |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள M/s. Adithya Agencies. No. 9/182/A 25, K.M.R. Nagar, Erode – 638 316 என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மற்ற ஒன்றையும் விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தினரிடம் இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வாகன எண். TN 36 AA 5506 (LCV Auto) இன் தகுதி சான்று காலம் முடிவடைவதால் இவ்வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 1149 நாள்.21.03.2025 இல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில், வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு வழங்கும் பணிக்கு 10.09.2025 தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.கஎண்.2122/2025/எச்1)**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | காந்தி மோட்டார்ஸ்,கே.கே. கார்டன், சி.எம்.நகர் ரோடு, கே.கே.எஸ்.கே லெதர் பேக்டரி அருகில், ஆர்.என்.புதூர், ஈரோடு – 638 005. | ரூ. 70,564/- |
| 2. | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், 5/93, வீரன் தோட்டம், திருச்சி மெயின் ரோடு, கோவை – 641 668. | ரூ.75, 107/- |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் அளித்துள்ள வரிசை எண்.1 இல் குறிப்பிட்டுள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையான M/s. காந்தி மோட்டார்ஸ், கே.கே. கார்டன், சி.எம்.நகர் ரோடு, கே.கே.எஸ்.கே லெதர் பேக்டரி அருகில், ஆர்.என்.புதூர், ஈரோடு – 638 005 என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்ட விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது..

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து

மேற்கொள்ளலாம் .

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வாகன எண். TN 36 AA 8939 (Dog Van) இன் தகுதி சான்று காலம் முடிவடைவதால் இவ்வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 1149 நாள்.21.03.2025 இல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில், வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு வழங்கும் பணிக்கு 10.09.2025 தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2123/2025/எச்1)**

| வ.எ | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | காந்தி மோட்டார்ஸ்,கே.கே. கார்டன், சி.எம்.நகர் ரோடு,கே.கே.எஸ்.கே லெதர் பேக்டரி அருகில்,ஆர்.என்.புதூர்,ஈரோடு – 638 005. | ரூ. 79,060/- |
| 2. | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர்,5/93, வீரன் தோட்டம்,திருச்சி மெயின் ரோடு,கோவை – 641 668. | ரூ.81, 125/- |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் அளித்துள்ள வரிசை எண்.1 இல் குறிப்பிட்டுள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையான M/s. காந்தி மோட்டார்ஸ், கே.கே. கார்டன், சி.எம்.நகர் ரோடு, கே.கே.எஸ்.கே லெதர் பேக்டரி அருகில், ஆர்.என்.புதூர், ஈரோடு – 638 005 என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்ட விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது..

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வாகன எண். TN 36 AA 2139 (FRONT END LOADER) வாகனத்திற்கு ஆயில் சரிவீஸ், ஆயில் பில்டர், டீசல் பில்டர் மாற்றவும், வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்து ஆயில் சர்வீஸ் செய்து பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவினங்களுக்கு நகர்மன்ற தீர்மான எண். 1149 நாள்.21.03.2025 இல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில், மகேந்திரா கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற செந்தூர் டிரேக்டர்ஸ்,லோட்டஸ் நகர், ஈரோடு மெயின் ரோடு கோபிசெட்டிபாளையம் அவர்களிடம் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு தொகை ரூ.21,293/- ஆகும் செலவினம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2266/2025/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள அம்மா உணவகத்தில் ரசீது வழங்கும் இயந்திரத்தில் பழுதுகள் ஏற்பட்டதால் அவசியம் கருதி பழுதுகள் செப்பனிடும் பணியில் அனுபவம் பெற்ற M/s. Ram Infotech, No. 157, 6 th Street Extension, 100 Feet Road, Gandhipuram, Coimbatore – 641 012 நிறுவனத்தினரிடம் பழுதுகள் சரிசெய்த வகையில் மொத்தம் ரூ. 3780/- செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்செலவினம் இந்நகராட்சி வருவாய் ஆய்வாளர் திரு.R. மோகன்ராஜ் அவர்களால் செலவிடப்பட்டு அதற்கான செலவின

ரசீதுகள் சமர்ப்பித்துள்ளதால் அவருக்கு அத்தொகையினை திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 866 /2025/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பழைய பேருந்து நிலைய வணிக வளாகத்தை இடித்து புதியதாக வணிக வளாகம் கட்ட ரூ.3.23 கோடி மதிப்பீட்டில் KNMT 2025-26 2190ச.மீ பரப்பளவில் கட்ட இத்திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 31.07.2025 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. எற்கனவே, உள்ள கட்டிடம் 2428.96 சதுர மீட்டர் அளவில் ஆனதாகும். தற்பொழுது புதிய கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து, இந்த பழைய கட்டிடத்தை இடிக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பழைய கட்டிடத்தை இடிக்க ஆகும் செலவீன | ரூ.2,27,34,70.00 |
| இடித்தவுடன் பயனற்ற சேகாரமாகும் பொருட்களுக்கான மதிப்பீடு | ரூ.1,71,26,71.00 |
| மீத தொகை | ரூ.5,60,799.00 |
| LWF | ரூ.5700.00 |
| LS | ரூ.3501.00 |
| மொத்தம் | ரூ.5,70,000 |

மேற்கண்ட பணிக்கு ரூ.5,70,000க்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கையினை தொடர அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :- 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 19.09.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வேங்கம்மையார் துவக்கப்பள்ளி கழிவறை, சுற்றுசுவர், மழைநீர் கால்வாய் மற்றும் சில மராமரத்து பணிகள் சீர் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 2,00,000 | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | -0.26% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.K.குழந்தை வேலு ஒப்பந்ததாரர் | 4.40% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

14. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி பூ அங்காடி பிளாக் C/9 T.S.No : 252-இல் உள்ள கடைகள் கட்டப்பட்டு 65 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. KNMT 2025-2026 திட்டத்தின் மூலம் புதிய தினசரி சந்தை கட்ட ரூ.2.64 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மற்றும் 31.07.2025 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இந்த பழுதடைந்த 8264.49 சதுர அடி கொண்ட கட்டிடத்தை இடிக்க கீழ்கண்ட வகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பழைய கட்டிடத்தை இடிக்க ஆகும் மதிப்பீடு | ரூ.9,96,014.50 |
| மேற்கண்ட கட்டிடத்தை இடித்தவுடன் சேகாரமாகும் பொருட்களுக்கான மதிப்பீடு | ரூ.5,85,776.00 |
| கழிக்கப்பட்ட பின்னர் ஆகும் மொத்த செலவீனம் | ரூ.4,10,138.00 |
| LWF | ரூ.4200.00 |
| LS | ரூ.5662.00 |
| மொத்தம் | ரூ.4,20,000.00 |

மேற்கண்ட கட்டிடத்தை இடிக்க ரூ.4.20 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கையினை தொடர அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 19.09..2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின்பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15இல் உள்ள வரதராஜ பெருமாள் கோவில் தேர் வீதி மற்றும் கடை வீதியின் சாலை சரி செய்தல் , மற்றும் நகராட்சி உரக்கிடங்கில் மின் இணைப்பு கட்டுமான பணிகள் மேற்கொள்ளுதல் | 70,000 | திரு.கே.ஆர்.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | -0.10% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 3.02% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திருகே.ஆர்.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம்

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 19.09.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட செங்கோடப்பா ஆரம்பப்பள்ளி , தக்கர் பாபா வித்யாலயா துவக்கப்பள்ளி, D S சாரதா நடுநிலைப்பள்ளி மற்றும் வைரவிழா முதல் நிலைப்பள்ளி ஆகிய 5 பள்ளிகளில் காலை சிற்றுண்டி வழங்க புதிதாக கூடுதல் அறை மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் | 10,00,000 | திரு.எம்.அப்புசாமி ஒப்பந்ததாரர் | −0.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.லோகு கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர் | 3.16% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.எம்.அப்புசாமி ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கு செலவின் தொகை ரூ.10,00,000/−னை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் 30.06.2025 இல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி கல்வி நிதி என்பதால் , செலவின தொகை ரூ.10,00,000/− னை தற்பொழுது நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025−2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 19.09.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 இல் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 20,67,414 | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | −0.04% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.கே.குழந்தைவேல் ஒப்பந்ததாரர் | 2.12% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் மின்தடை ஏற்படும் காலங்களில் கணிணிகள் , மின்விளக்குகள் மற்றும் மின் விசிறிகள் தொடர்ந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதால் கணிணிகள் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, மின்தடை ஏற்படும் காலங்களில் தொடர்ந்து மின் வசதி பொருத்துவதற்கு இந்நகராட்சி அலுவலகத்திற்கு 25KVA டீசல் ஜெனரேட்டர் அமைப்பதற்கு உத்தேச செலவீனம் தொகை ரூ.7.00இலட்சம் ஆகும். எனவே அச்செலவின தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்த மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–12இல் உள்ள நகராட்சி அலுவலகத்தின் நகர்மன்ற கூடத்தில் நாற்காலிகள் மற்றும் மேடை அனைத்தும் மிகவும் பழுதடைந்துள்ளதால், இதனை சீரமைக்க வேண்டியுள்ளது. இங்கு மக்கள் பிரநிதிகள், நகர்மன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அதிக அளவில் பங்கேற்று மக்கள் குறைகளை கண்டறிந்து நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இதனால் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூடத்திற்கு சில அத்தியாவசியமான பணிகள் மேற்கொள்ள செலவீன தொகை ரூ.7.00 இலட்சம் ஆகும். எனவே, அச்செலவீன தொகையை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

( ஒம்)– என்.ஆர்.நாகராஜ்

தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்.

கோபிசெட்டிபாளையம் நகராட்சி